பக்கங்கள்: எட்டு

Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா: 5-00

# வலம்புரி
VALAMPURI

நாளுக்கு நாள் மாறும்
நவ நாகரிக
ஆடை வகைகளுக்கு:
காவேரி
பட்டுச் சோலை
48, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்
T P 2333
(சி-2854)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 08 வெள்ளிக்கிழமை (23-11-2001) தொலைபேசி: 3378 ஒ பி 347

### ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக

# ஐ. தே. கவும் பொ. ஐ. முன்னணியும் தமிழ் மக்களை ஏமாற்றுகின்றன!

## மல்வத்த பீடாதிபதி தெரிவிப்பு!

(நமது நிருபர்)

**நாட்டில் உள்ள பெரும்பான்மைக் கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஆட்சியைக் கைப்பற்றும் ஒரே நோக்கில் அப்பாவித் தமிழ் மக்களையும், தமிழ்க்கட்சி தலைவர்களையும் தேர்தல் பிரசாரத்திற்காகப் பயன்படுத்தி வருகிறது. இது வழமையான இனவாத அரசியல் நடவடிக்கையாகும் என்று மல்வத்த பீடாதிபதி ரம்புக்கன விபக்ஸிசாரதேரர் இரு கட்சிகள் மீதும் குற்றம் சாட்டியுள்ளார்.**

முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிரதேசத்திற்கு சென்று வருபவருமான டாக்டர் ஜெயலத் ஜயவர்த்தனா விடுதலைப் புலிகளின் நெருங்கிய ஆதர்வாளர்களுடன் உரையாடிய ஒலிப்பதிவு நாடாவையும் அவர்தமிழீழ விடுதலைப்புலிகளின்அரசியல் துறைப் பொறுப்பாளர் சு ப தமிழ் செல்வனுக்கு எழுதிய தாகத் கருதப்படும் கடிதங்களையும் மல்வத்த பீடாதிபதிக்கு. அமைச்சர்கள் அனுருத்த ரத்வத்த, மங்களசமரவீர, சரத் அமுனுகம ஆகியோர்

[08ம் பககம் பார்க்க]

## 12 வருடங்களின் பின்னர் ஜே. வி. பியின் தலைவர் நேற்று கொழும்பு வருகை

(கொழும்பு)

ஜே வி.பியின தலைவர் சோமவன்ச அமரசிங்க நேற்று இலங்கை வந்து சேர்ந்தார்.

ஜே வி.பி யின் முன்னாள் தலைவர் அமரர் றோகண விஜய வீராவின் நெருங்கிய சகபாடியாகவும், அமைப்பின் மத்திய குழு உறுப்பினராகவும விளங்கிய சோமவன்ச, 1989 ம் ஆண்டு ஐ.தே கட்சியின் ஆட்சியின் போது இலங்கையை விட்டு வெளியேறி வெளிநாடொன்றில் தலைமறைவாக வாழ்ந்தார்.

தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் உருவான கூட்டு நல்லுறவின் அடிப்படையில் ஜனாதிபதி சந்திரிகாவின் அனுமதியுடன் லண்டனில் இருந்து நேற்று கட்டு

(8ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் பகுதியில் வாக்காளர் அட்டை அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் வாக்காளர் அட்டைகளை இனம் தெரியாத சிலர் அபகரித்துச் சென்றதாக தெரியவந்துள்ளது.

நேற்றைய தினம் பி.ப2.45 மணியளவில் மேற்படி பகுதியில் வாக்காளர் அட்டை விநியோகம் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை திடீரென மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவற்றைப் பறித்துச் சென்றதாகவும்;

இதில் 381வாக்காளர் அட்டைகள் அடங்கும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

(செ-10)

### பொதுமக்கள் பார்த்திருக்க

## ஐ. தே. கட்சி ஆதரவாளர்களை ஈ.பி.டி.பி. குழுவினர் தாக்கினா!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் நேற்று முன்தினம் இடம் பெற்றவன்முறைச் சம்பவம் குறித்தும் அதற்கு ஈ பி. டி பி விடுத்த பத்திரிகைக் குறிப்புக்கு மறுப்புத் தெரிவித்தும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐ தே. கட்சியின் முதன்மை வேட்பாளருமான தி. மகேஸ்வரன் நேற்று வலம்புரிக்கு அறிக்கையொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அவ்வறிக்கையில் ஈ.பி. டி பியின் குண்டர்கள் தமது கட்சி ஆதரவாளர்களை வலிந்து தாக்கியதாகவும் இதற்கு அப்பகுதியில் நின்ற

(8ம பக்கம் பார்க்க)

### சமாதானத்தை வலியுறுத்துவோருக்கு

## வாக்களிக்குமாறு கோரிவீடு வீடாக யாழ்.பல்கலை மாணவர் பிரசாரம்!

[யாழ்ப்பாணம்]

எதிர்வரும் தேர்தலில் யாழ் குடாநாட்டு மக்கள் சமாதானத்துக்கு எதிரான சக்திகளை தோற்கடிக்கச் செய்யும் வகையில் சமாதானத்தைவலியுறுத்துவோருக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டுமென்று கோரி வீடுவீடாகச் சென்று யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

இப்பிரசாரத்தில் ஈடுபடுவதற்காக நேற்று ஆயிரக்கணக்கான மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் இருந்துஊர்வலமாகபுறப்பட்டு யாழ்பஸ்நிலையத்தை வந்தடைந்தனர்

பஸ் நிலையத்திலிருந்துசிறு சிறு குழுக்களாகப் பிரிந்து சென்று மக்களுடன் கலந்துரையாடி யுள்ளனர்.

இதேவேளை யாழ் பல்கலைக்கழகமாணவர்ஒ றியம் நேற்றைய தமது ஊர்வலமும்

(08ம் பக்கம் பார்க்க)

## ஹக்கீமின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு உத்தரவு

### பயஸ் முஸ்தபா விடுத்தார்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தலைவர் ரவூட ஹக்கீமிற்கு கட்சித் தலைவர் என்ற ரீதியில் பாதுகாப்பை அதிகரிக்கும் படியும் இவருக்கு ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் இருந்தோ அல்லது அமைச்சரவை பாதுகாப்புப் பிரிவில் இருந்தோ அல்லது அதிரடிப் படைப் பாதுகாப்புப்பிரிவில் இருந்தோ 22 பேரை பாதுகாப்பாகநியமிக்கும்படிமனித உரிமை ஆணைக்குழுத் தலைவர் பயஸ் முஸ்தபா உத்தர


(8ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் ஒரேதெரிவு



யுத்தத்திற்கு முடிவு கட்டி அச்சமற்ற அமைதி வாழ்வைக் காண..

எக்காலமும் ஒன்றான வடக்கு கிழக்கு மாகாணத்தில் விசேட அதிகாரங்களுடனான ஆட்சி அமைக்க.,



X

வீணையே உங்கள் தெரிவு! சேவையே எங்கள் இலக்கு!

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

(இ/2889)

# கொழும்பிலுள்ள சகல சேரிவாசிகளுக்கும் நிரந்தர வீடுகள் அமைப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சகலசேரிவாசிகளுக்கும் இன்னும் நான்கு வருடங்களிற்குள் நிரந்தர வசிப்பிடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா உறுதியளித்துள்ளார்.

கொழும்பில் 66 குடிசைகள் காணப்படுகின்றன.

இக்குடிசைகளை சகல வசதிகளும் கொண்டவையாக மாற்றுவதற்குரியஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இதன்படி அமைத்துக் கொடுக்கப்படவுள்ள ஒவ்வொரு வீடும் 10 லட்சம்ரூபா பெறுமதி வாய்ந்தவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(செ)

## மத வேறுபாடுகளை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சேவையைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

## தியானம் பிரார்த்தனை

மனித மனதிற்கும் அளவிறந்த சக்தியுண்டு. எனவே, பிரார்த்தனை மூலம் தியானத்தின் மூலம் அச்சக்தியை வளர்த்துக்கொள்வதற்குவழி காட்டுகிறார் பாபா. தியானத்தின் பயனால் ஏற்படும் தளர்வு நிலையினால் சில முக்கிய தாக்கங்கள் ஏற்படுகின்றன. தியானத்தினால் ஏற்படும் மனோசக்தியை நன்மையான தாக்கத்திற்கு உபயோகிக்கவேண்டும். தியானம் மக்களிடையே அதீத அமைதித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. தியானத்தினால் ஏற்படும் சக்தி அளவிறந்தது. அதனால் அது ஏற்படுத்தும் அமைதியும், மென்மையான உணர்வுகளும் மற்றையோரிடமும் தொற்றிக் கொள்கிறது. வைத்தியர்களும்.இப்போது இதனைமுக்கியமாகக் கருதுகிறார்கள். நாளாந்த பிரார்த்தனைகளுடன், பிரபஞ்சம் அனைத்தின நலனுக்காகவும் வேண்டி 'அனைத்து உலகங்களிலும் இன்பம்நிலவுவதாக'(லோகா சமஸ்தா சுகினோபவந்து) என்ற வேதவாக்கியத்தையும் நாளாந்த பிரார்த்தனையில் சேர்த்துக் கொள்ளுமாறு சத்திய சாயிபாபா வலியுறுத்துவதுடன், பின்வரும் அருளுரைகளையும் தருகின்றார்.

'தவறு செய்வது மனிதருக்கு இயல்பே'' என்ற பலஹீன எண்ணத்தைவிட்டுவிடவேண்டும். நான் பலஹீனமானவனல்ல, அரக்கனல்ல, மிருகமல்ல, நான் மனிதன் என்று கூறிக் கொள்ளவேண்டும். இந்த உணர் விருந்தால் தவறுகள் செய்யமாட்டார்கள். நான் என்றால் ஆத்மாவைச் சார்ந்தவன் என்றே பொருள். ஆத்மனின் உணர்வில் ஊன்றிததேகத்தைப்பற்றிய பற்றுதலை உதறிவிட்டால், தீயஎண்ணங்கள மனதில் எழா, சரீரஉணர்வினால் தான் தீயஎண்ணங்கள உதிக்கின்றன.

மனிதன் பேச்சளவில் வீரனாக இருக்கின்றானேயன்றி (Hero) செயலில் சுன்னம் ஆகவே (Zero) அதாவது பூஜ்யமாகவேயிருக்கிறான்.

அகங்காரமும், கோபமும் அன்றாடம் மனிதனின் வாழ்வில் குறுக்கிட்டு, ஆயுட்காலத்தை வெகுவாகக் குறைக்கின்றன. மனிதன் ஒருமுறை கோபப்படும் போது, உடலில் வெப்பம் அதிகமாகி இரத்தம் கொதித்து விடுகிறது. நரம்புகள் தளர்ச்சியடைந்து எல்லா உறுப்புகளும் பலஹீன மடைகின்றன. இது சாதாரணமாக ஈடுசெய்ய முடியாதது, ஒருமுறை கோபப்பட்டால், ஆறு மாதகாலம்உண்டஉணவினாலாகிய சக்தி விரயமாகி விடுகின்றது. இந்தப் பலத்தைத் திரும்பப் பெற மேலும் ஆறு மாத காலமாகிவிடும். ஒவ்வொருமுறை கோபம் கொள்ளும் போதும், ஆயுட்காலம் குறைந்து கொண்டேவருகின்றது. இதேபோல அகங்காரமும், பற்றுதலுங்கூட ஆயுளைக் குறைப்பவையே!

'நல்லோர்களும், முனிவர்களும், அறிஞர்களும் சாதுக்களும், குருமார்களும், இறையுணர்வு கொண்டோரும் எனக்காக ஏங்கியதால், நான் வந்தேன், எனக்கு உடம்பாகிய இலையின்மேல், பணிவுடைமை என்னும் நறுமணம் வீசும் மனமாகிய மலரையும், தவவலிமையால் பழுத்ததும், இரக்கம், கொடை, அடக்கமுடைமை முதலிய இனிய ரசத்தையுமுடைய இதயமாகிய கனியையும், ஆனந்தக் கண்ணீராகிய நறும் புனலையும் கொடுத்தால் போதும்,

''உடலை அருவருத்துப் பேணாமல் விடுவது கடவுளை அடைவதற்கு வழியாகாது. உடலே இறைவன் தங்கியிருக்கும் ஆலயம், பிறப்பு, இறப்பு என்னும் கடலைக் கடக்க உதவும் ஓடமும் அதுவே, அவ்வுடலில் காணப்படும் விவேகமும், வைராக்கியமும் அவ்வோடத்தைச் செலுத்தும் துடுப்புகளாகும். ஆதலால் அவ்வுடல்என்னும்அருங்கருவியைப் போற்றிப் பேணிப் பாதுகாத்து ஒவ்வொருவரும் செப்பமான நிலையில் வைத்திருக்க வேண்டும். ஆனந்தத்தைத் தேடிக் கொண்டு ஒருவரும் எங்கும் போக வேண்டுவதில்லை. அது உள்ளத்திலேயே ஒரு சிறு பொறி போல இருககிறது. அதை வீசி ஜுவாலை விடும் நெருப்பாக வளர்ப்பது தான் சத்கருமம்.

குரு பெருமானின் பாதங்களை மனத்தில் தியானம் செய்வாயாக! அது ஒன்றே பிறவி என்னும் கடத்தற்கரிய கடலைக் கடப்பதற்குஉதவும் சாதனமாகும். ''மானஸ பஜரே குரு சரணம், துஸ்தர பவஸாகர தரணம்.''

மாந்தருக்குள் நாஸ்திகர்கள் என்னும் தனி வகுப்பு ஒன்று இல்லை. ஆனால், இறைவனை உணராதவர்களும், அவனுடைய மகிமையின் அனுபவத்தைப் பெறும் வாய்ப்புப பெறாதவர்களும் ஆகிய சிலரே இருக்கிறார்கள்.

அழகே ஆனந்தம்: பாலில் வெண்ணெய் மறைந்திருப்பதைப் போல ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தெய்வீகஅம்சம் இரண்டறக் கலந்து மறைவாக இருக்கின்றது. வெண்ணெயை எடுப்பதற்கு எப்படிக் கடைகின்றோமோ, அப்படி நம் மனத்தைக் சத்கருமம் சத்சங்கர் என்னும் மத்தைக் கொண்டுகடைந்து தெய்வீக வாழ் வென்னும் வெண்ணெயைப் பெற வேண்டும்.

கல்வியறிவற்ற எளிய மக்களுக்கு உய்த்துணர்தற்கரிய மறைபொருளாகிய வேதாந்த உண்மைகளைப் புகட்டுவது காலவிரயமும், சக்தி விரயமுமேயாகும். தீவிர விரதங்களையும், நியமங்களையும் அவர்களைக் கைக் கொள்ளச் செய்வதும் அறிவுள்ள செயலாகாது' ஆசாரியர்களும், தேசிகர்களும் எளிய மக்களைத் தீய செயல்களை ஒவ்வொன்றாக விடச் செய்து, ஜெபதபங்களில் நேரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நீடிக்கச் செய்து, அவர்களைப் படிப்படியாக முன்னேற்றப் பாதையில் ஊக்குவிக்கவேண்டும்.

ஈகையைக் கடைப்பிடி, ஆனால் பணம் தந்து ஏழைகளை உருவாக்கி விடாதே, உணவு, உடை, உறையுள் வழங்கி வேறு வழிகளில்உதவி செய்! ஆனால் சோம்பேறிகளை வளர்க்காதே!

# இராசி பலன்

23-11-2001
(கார்த்திகை 8, வெள்ளி)
அட்டமி பி.ப 6.27வரை
சதயம் முழுவதும்
ராகுகாலம் 10.41-12.10
சுபநேரம் 6.11-7.41

**மேடம்**
நினைத்தகாரியம் கைகூடும் தனலாபம். நண்பர்கள் சந்திப்பு தெய்வதரிசனம்,

**இடபம்**
பிறர் உதவி. முயற்சி நிறைவேறும், தொழில் முன்னேற்றம், குடும்பசுகம்.

**மிதுனம்**
புதியதொழில் சிந்தை, பிரயாணம். மனக்கிலேசம், காரிய தாமதம்,

**கடகம்**
தொழில்கஷ்டம், எதிரிகள் தொல்லை, முயற்சி தடங்கல் வியாதி.

**சிங்கம்**
நண்பர்கள் உதவி, காரிய நன்மை, கௌரவம், பொருள் சேர்க்கை.

**கன்னி**
ஆரோக்கியம், சத்துரு ஜெயம், மன மகிழ்ச்சி, தொழில் சிறப்பு.

**துலாம்**
தாழ்ந்த சுபாவம், வியாபாரவிருத்தி, உறவினர்மனஸ்தாபம், காரியதாமதம்

**விருச்சிகம்**
காரியபங்கம், நம்பிக்கைக் குறைவு, ரோகம், குடும்பக் கவலை.

**தனுசு**
கூட்டுமுயற்சி, இனிய சம்பவம், தனவரவு, அன்னியர் உதவி.

**மகரம்**
முயற்சி கைகூடும், வாக்கு குழப்பம், பொருள் விரயம், புதியமாற்றம்.

**கும்பம்**
புதிய பொருள் சேர்க்கை சயனசுகம், பெரியோர்மதிப்பு காரியம் கைகூடும்.

**மீனம்**
சுபகாரிய செலவு, அலைச்சல், போகஙசுகக்குறைவு பிரயாணம்

(பழையநேரப்படி கணிக்கப்பட்டது)

வளவன்

# மன்னார் மாணவர் ஒன்றியக் கூட்டம்

யாழ் பல்கலைக்கழக மன்னார்மாவட்ட மாணவர் ஒன்றியக் கூட்டம் இன்று பி.ப 4மணிக்குவணிகத்துறை மண்டபத்தில்நடைபெறும். இதில் சகல மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது

(உ-2)

# வலம்புரி நடத்தும் சிறுகதைப் போட்டிக்கு

கதைகள் அனுப்ப வேண்டிய
இறுதி நாள்
**28 - 11 - 2001**

சமகாலத்தையொட்டிய கருப்பொருளில் 5 பக்கங்களுக்கு மேற்படாமல் கதைகள் எழுதப் படவேண்டும். (ஆ-ர்)



# யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவினால் பின்வரும் பயிற்சிநெறிகள் இலவசமாக ஆரம்பிக்கப்பட உள்ளன.

1) நூலகவியல் பயிற்சிநெறி
2) பத்திரிகையாளர் பயிற்சிநெறி
3) முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி
4) கணனிப் பயிற்சிநெறி

மேற்படி பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்று 30.11.2001 க்கு முன் ஒப்படைக்கவும்.

[கி-2912] அதிபர்

# யாழ்ப்பாணம் - மாநகரசபை

## சந்தைகள் மற்றும் இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

# மீள்கேள்வி அறிவித்தல்- 2002

கீழ்க்காணப்படும் சந்தைகள் மற்றும் இறைச்சிக் கடைகளை 01-01-2002 முதல் 31-12-2002ம் ஆண்டு வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப் படுகின்றன.

கேள்விப் படிவக்கட்டணம்ரூபா 281/25 (ஜி எஸ் ரி உட்பட)வும், கீழ்க்காணப்படும் கேள்விப் பிணைப் பணமுமசெலுத்துவதன் பேரில் எதிர்வரும் 10-12-2001ந் திகதி திங்கட் கிழமை பி.ப 3.00 மணிவரையும் கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். எதிர் வரும் 11-12-2001ந் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணிக்கு முன் கேளவிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் அதே தினம் பி.ப 2.30 மணிக்கு கிடைக்கப் பெற்ற கேள்விகள் யாவும் திறந்து பரிசீலிக்கப்படும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்

விபரம்

| சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைவைப்பு | நிர்ணயிக்கப்பட்ட கேள்வித் தொகை (ஜி.எஸ்.ரி நீங்கலாக) |
|---|---|---|
| 1) கொட்டடி/ பண்ணை மீன் சந்தை | 5000/- | 1989000.00 |
| 2) பெரியகடை மரக்கறிச் சந்தை | 5000/- | 325000.00 |
| **இறைச்சிக் கடைகள்** | | |
| 1) குருநகர் ஆட்டிறைச்சிக் கடை இல. 7 | 2500/- | 8000.00 |
| 2) செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை இல. 1 | 2500/- | 82500.00 |
| 3) நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை இல. 4 | 2500/- | 6100.00 |
| 4) நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை இல. 5 | 2500/- | 8100.00 |
| 5) நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை இல. 6 | 2500/- | 5300.00 |
| 6) நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை இல. 7 | 2500/- | 9700.00 |
| 7) நாவாந்துறை ஆட்டிறைச்சிக் கடை இல. 8 | 1500/- | 3700.00 |

இ. இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்
21-11-2001

[கி/2913]

# பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் 76வது அவதார நாள் 23.11.2001

## உலகில் சத்தியம், சாந்தி, பிரேமை ஓங்கிட



## நல்வழி காட்டிடும் சத்திய சாயி அவதாரம்

பகவான்பாபா ஒவ்வொரு பிறந்த தின விழாவிலும் எனது உடலுக்குத் தான் நீங்கள் பிறந்த தினம் கொண்டாடுகிறீர்கள். எனக்கு பிறப்புமில்லை, இறப்புமில்லை, நான் உங்களோடு சேர்ந்து உலாவித்திரிவதாலும் உங்களைப் போல் உண்பதாலும் ஒரு சர்வசாதாரணமான மனிதன் என்னும் மயக்கத்தில் விழக்கூடும் உங்களோடு சேர்ந்து பாடுவதாலும் ஆனந்தமாகக் கதைபபதாலும் நானுமே உங்களை மாயையில் மயங்குகிறேன். அன்புடன் சொல்லொன்றைப் பேசுவது களைத்துச் சோர்வடைந்திருக்கும் கால்களுக்கு சுகமளிக்கும் களிம்பு போன்றது: பல இடங்களிலிருந்து அன்பினால் ஈர்க்கப்பட்டு பலவித கஷ்டங்களை அனுபவித்து பிரசாந்தி நிலையத்தை நாடி வருகின்றீர்கள். உங்களைக் கண்டவுடன் ஒன்றும் தெரியாததுபோல ஆ எப்பொழுது இங்கே வந்தீர்கள் என்று கேட்கிறேன். பாபா ஏன் இப்படிக் கேட்கிறார் என்று பிறருக்கோ சந்தேகமாக இருக்கும். அவருக்கு தெரியாதா? நிச்சயமாக அவருக்கு தெரியும் அப்போ ஏன் இந்த விசாரணை ஒருவர் பிரசாந்தி நிலையத்திற்கு வந்தவுடன் உங்களை நான் இப்படி விசாரிப்பதால் உங்களுக்கு எவ்வவு ஆனந்தம் ஏற்படும், இதுவே யோகமாயை.

### அசாந்திக்குப் பிரசாந்தி

உங்களைப் போன்று நான் உண்பதும் உலாவித் திரிவதும் உங்கள மொழியில் பேசுவதும் உங்களுக்காகவேயன்றி எனக்காகவில்லை நல்லவர்களைப் பாதுகாக்கவும் தீயோர்களை அழிப்பதற்கும் தர்மத்தை திடமாக ஊன்றுவதற்கும் யுகத்திற்கு யுகம் நான் வந்து அவதரிக்கின்றேன். எப்போது உலகை அசாந்தி சூழ்ந்து மூடுகிறதோ அப்பொழுது பிரசாந்தியைச் சம்பாதிக்கும் வழிகளை ஸ்தாபித்து மக்களெல்லாம் சாந்திப் பாதையில்செல்வதற்கான வழிகளை மீளக் கற்றுக் கொடுக்க இந்த மனித உருவத்திலே வந்திருக்கிறேன். நான் பௌதிக விஞ்ஞான விதிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவன், இப்போது பிறந்திருப்பவர்கள் அதிலும் தன்னை நேரடியாகத் தரிசனம் பெற்றவர்கள் எல்லாம் பல்வேறு பிறவிகளால் பெற்ற நற்பயனே என்று பகர்கின்றார் சர்வலோக நாயகன் பகவான் சத்திய சாயிபாபா.

**ம. சிவயோகசுந்தரம்**
நல்லூர்.

### அன்பே விசேஷமானது

அற்புதங்களைப் பார்த்து விட்டு இது தான் சாயியின் தன்னிகரில்லாததத்துவம் எனப் பலர் நினைக்கிறார்கள் ஆனால் நான் உங்களுக்கு கூறுவது இந்த அற்புதங்களுககு நீங்கள முக்கியத்துவம் கொடுககாதீர்கள. எனது விஷேசமான சக்தி அன்பு அல்லது பிரேமையாகும். வேண்டுமென்றால் என்னால் ஆகாயத்தை பூமியாக்கவும்பூமியை ஆகாயமாக்கவும் முடியும். ஆனால் தெய்வீக சக்திக்கு அடையாளம் அதுவன்று. பொறுமையும் எங்கும் வியாபகமானதும் என்றுமுள்ளதுமான பிரேமையே தெய்வீக சக்தியின் நிகரற்ற அடையாளமாகும். இந்த உண்மையை நான் உங்களுக்கு கூறவேவேண்டும் உங்களில் நூறுக்கு தொண்ணூற்றொன்பது பேருக்கு எனனுடைய உண்மையைப் பற்றித் தெரியாது.

### மனித புத்தியைச்சரிப்படுத்தல்

தர்ம வழிககுப் புறம்பானவர்கள் என அடையாளம் காணப்பட்ட ஒருசில எதிரிகளையே ராமர், கிருஷ்ணர் போன்ற அவதாரங்கள் வதம் செய்து அதன் மூலம் தர்மத்தை ஸ்தாபிக்க வேண்டியிருந்தது. ஆனால் இன்றோ யாருமே நல்லவர்களாகத் தெரியவில்லை. எனவே யாருக்கு கடவுளின் பாதுகாப்புத் தேவை? தீய குணங்களால் எல்லோரும் களங்கப் படுகிறார்கள், எனவே, எல்லோரையும் பூண்டோடு களைய இந்த அவதாரம் முற்படின் யார்தான் உயிரோடு மிஞ்சுவார்கள்? ஆகவே மனிதர்களின் புத்தியை அவரவர்க்கு ஏற்ற முறையில் பல்வேறு வழிகளில் சரிப்படுத்தவே நான் வந்திருக்கிறேன். உலக மக்களுக்கு சாந்தி, பிரேமை, ஆனந்தம், தர்மம் ஆகிய இவற்றைப் பரப்பவே இந்த சத்திய சாயி அவதாரம் மானிட உருவில் வந்துள்ளது.

பகவான் பாபா எங்களைப் பார்த்து இது ஒரு பெரிய சந்தர்ப்பம் நீங்கள் யாவரும் விடுவிக்கப்பட்டு விடுவீர்கள் எனத் திடமாக நம்புங்கள்; நீங்கள் ரட்சிக்கப்பட்டு விட்டீர்கள் எனத் தெரிந்துகொள்ளுங்கள் நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படும். யாவர்க்கும் வாழ்க்கை மகிழ்ச்சியும் ஆனந்தமும் நிறைந்து விளங்கும் பொற்காலம் மீளவரும் என்பதை நம்ப பலர் தயங்குகிறார்கள். இந்த தர்மஸ் வருபம் சும்மா வரவில்லை என நான் உறுதியாகக் கூறுகிறேன். உலகத்தில்மனிதனைப் பிடித்திருக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இந்த அவதாரம் நிச்சயம் வெற்றியடையும் என அருளியுள்ளார்,

### சீரிய வாழ்க்கை

பகவான் பாபா ஆரம்பத்தில்' எனது வாழ்வுதான் எனது போதனை' என்று கூறினார். ஆனால் இன்று பகவான் பாபா உங்கள் வாழ்க்கை தான் எனது போதனை என கூறி அத்தகைய ஒரு சீரியவாழ்க்கையை எதிர்பார்க்கிறார் இன்று பகவானின் கல்விப் புரட்சி உலகெங்கும் பெரிய வரவேற்பைப் பெறுகின்றது: இன்று பகவான் நீயும் நானும் ஒன்றே என்ற நிலைக்கு கொண்டு வந்து தன்னைப்பாதநமஸ்காரம் எடுப்பதைக் கூடத் தேவையில்லைஎன நிற்பாட்டி விட்டார். பகவானின் எழுபத்தாறவது அகவையில் சுவாமி கூறிய மனித மேம்பாட்டு தத்துவங்களால் எமதுபிறவியின் உண்மையான நோக்கத்தை அடையஉதவுமாறுசாயீசனை வாழ்த்திவணங்கு வோமாக.

### பர்த்தியில் கற்பகதருவொன்று

கற்பக தருவொன்று பர்த்தியில் எழுந்தது  
கழிமிகு நிழலினை கனிவுடன் தருவது  
அற்புதக்காட்சி தந்து அருள்மலர் சொரிவது [illegible]  
அளவில் பேரின்பத்தை அள்ளியே கொடுப்பது

நற்பணியாற்றிட நல்வழி வகுப்பது-இந்  
நானிலம் போற்றிட நல்லுரை புகன்றது  
பொற்பாதம் கிட்டிட புகலிடம் தருவது தீய  
பொல்லாத வினைகள் ஓட புத்துயிர் அளிப்பது

காலத்தின் கணக்கினை கணித்தே வைத்திடும்-நற்  
கருமத்திற் கேற்பதனை கூட்டியே கழித்திடும்  
ஞாலத்தின போக்கதனை நன்றே நவின்றிடும்-தூய  
ஞான தீபத்தினை உளத்தே எந்நாளும் ஏற்றிடும

சீலத்தின் சிகரமாய் சீருடன் விளங்கிடும்-உயர்  
சிந்தை கவர்ந்திடும் செல்வமாய் திகழ்ந்திடும்  
ஆலத்தின் வேரதாய அவனியில நிலைந்திடும்-எமக்கு  
அருமருந்தாய் இருந்து அகவிருள போக்கிடும்

செங்கமலக் கண்ணனாய் திருவாய் மலர்ந்திடும்  
திருமால் அழகனாய் திருவுலா வந்திடும்  
அங்கம் பொலிவுறே அவதாரம் எடுத்திடும்  
ஸ்ரீசத்திய சாயியாய் அமர்ந்தருள ஈந்திடும்

பொற்பாதம் பற்றினோம் சாயிக்கிருஷ்ணா!  
என்றும் நின்நாமம் எந்நாளும் நவின்றிட—  
வற்றாத அருளமழை ஊற்றாகப் பெருகிட-எமக்கு  
நன்னெறி காட்டியே நற்கதி அருள்வாய்

**ஜெய் ஜெய் சாய்ராம்**

**ஆர். சுதாகரன்**
(வங்கியாளர்)

# மதவேறுபாடுகளை நீக்கித் தெய்வீக வாழ்வை நிலை நிறுத்த அவதரித்த 'சத்தியசாயிபாபா'

"நல்லவர்களைக் காக்கவும், தீயவர்களை அழிக்கவும், நீதியை நிலை நாட்டவும் நான் காலத்திற்குக் காலம் அவதரிப்பேன்" என்பதுகீதை வசனம் உலகில் தற்போது நிகழும் சண்டைசச்சரவுகள், வேறறுமை, முரண்பாடுஆகிய தீய குணங்கள குடும்பத்தில், பாடசாலையில், சமூகத்தில், நகரத்தில் அறிஞர்களிடத்தும் வலிந்து அமைதியையும் ஒற்றுமையையும் அமுங்கடித்துவிட்டன. நான் சாதுக்களின் வேண்டுகோளுக் கிரங்கி வந்துள்ளேன், எனது முக்கிய பணி வேதங்களையும், பக்தர்களையும், பாதுகாப்பதே. எனது மகிமையை நீங்கள் உங்கள் ஒழுக்கம், சுயகட்டுப்பாடு, பக்தி, பற்றின்மை, உறுதி ஆகியவற்றைக் கொண்டே அறிய முடியும்" என்று புட்டபர்த்தியில் இருந்து ஷீரடிசாயிபாபாவின் நேரடி அவதாரமாய் விளங்கும் ஸ்ரீசத்தியசாயிபாபா கூறுகின்றார்;

### மதங்களின் நோக்கம்

உலகியலான பௌதீக வாழ்க்கை நிலையற்றது; இளமை, உலகியலான செல்வங்கள் எல்லாம் நகர்ந்து செல்லும் மேகங்களைப் போன்றவை. கண நேரத்தில் மறைந்து விடும். மனைவி பிள்ளைகள், பந்துக்கள் கூட மூடு பனி-மின்னல் போல சட்டென்று மறைந்து விடக்கூடியவர்கள். மனிதவாழ்க்கையில் சத்தியமான நடத்தை, சத்கீர்த்தி இரண்டும்நிரந்தரமானவை. மனித வாழ்க்கையைச் சீரமைக்கவும் திருத்தி வழிநடத்தவும். பல்வேறு மதங்கள் உருவாயின. மனித வாழ்க்கையில் உள்ள வேறுபாடுகளைக் களைந்து அவர்களிடையே ஒற்றுமையை உருவாக்கித் தலை சிறந்த சமுதாயமாக மாற்றுவதே மதங்களின் நோக்கம் என்கின்ற உண்மையை உணர்ந்து, புரிந்துகொள்வதே ஒவ்வொருவரின் கடமையுமாகும். அனைத்து மதங்களின் சாரமும், மனிதர்கள் கடைசியில் அடைய வேண்டிய இலக்கு

**மதிவாணர்**

ஒன்றே என்பதை உணர்த்துகின்றன. ஆனால் மனிதன் தன் சுய நலத்தினாலும் குறுகிய நோக்கினாலும், மதத்தைக் கருவியாகக் கொண்டு கலகத்திலும், சண்டைகளிலும் ஈடுபடுகிறான்;

### சாயிவழியே சிறந்தது

எல்லாமதங்களுக்கும் ஆதாரமானவைஒழுக்கம், தானம், தர்மம், சத்தியம், பாரம்பரியக் கலாசாரம், சகிப்புத் தன்மை அகிம்சை முதலியனவாகும். ஆனால் பண்டைக் காலத்திலிருந்தே இந்த உண்மையை மறந்து விட்டு, வேறுபாடுகளையேநினைத்து மதங்கள் வளர்ந்து வந்திருப்பதால், மனித வாழ்க்கையில், தெய்வீகத்தில் இருக்கும் ஒற்றுமையைப் பற்றிப் புரிந்து கொளவது அவசியமாகிறது. மனித இனத்திற்கு எதிர்காலம் இல்லாவிடில், சாயிபாபாவின் வழி ஒன்றே அதனை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியது. ஒவ்வொருவரும் மதத்தைப் பின் பற்றும் போதே தமது மதம் தமக்கு எப்படியோ, அப்படியே மற்றமதங்கள் அவற்றைப் பின்பற்றுபவர்களுக்கு உகந்தது என்ற உணர்வோடு இருக்கவேண்டும். கடவுள் எவ்வாறு, எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டாலும் ஒருவரே யென்பதைஉணரவேண்டும். தனது மதக் கடவுளே உலகைப் படைத்தவர் என்று கூறும் மனிதன் மற்றவர்களை வெறுக்கலாமா? மற்றவர்களைச் சகித்துக் கொள்ளும் பண்பின்மை. தன்னுடையதே சரி என்னும் பிடிவாதம் என்பன கெடுதலானவை. பாபா ஒவ்வொருவரையும் தமது சொந்த மதத்தைப் பின்பற்றுபடி ஊக்குவித்து படுகுழிகளில விழுவதிலிருந்து காப்பாற்றுகிறார்.

ஆதிகாலந் தொட்டு உலகெங்கும் உள்ள மடாலயங்களில் அவை எம்மதத்தைச் சேர்ந்தவை ஆயினும் சரி, மனோசக்தி நிபுணர்கள் இருந்திருககிறார்கள. வெகு சிலரே இதன் அனுகூலத்தை அறிந்திருக்கிறார்கள். அவர்கள இல்லாவிட்டால் உலகம் தற்போதைய நிலையிலும் பார்க்கமிக மோசமான நிலையை அடைந்திருக்கக் கூடும்; சிலர் நினைப்பது போல துறவிகளும் ஞானிகளும் உலகச் செயற்பாடுகளிலிருந்து விலகிச் செல்பவர்களல்லர் மிகவும் அவசியமானதும் உபயோகமானதுமான

( 2 ஆம் பக்கம் பார்க்க)

# உயர்தர மாணவர்களுக்கான அறிவியல் வினாக்கள்

## இல. 84 தொகுப்பு: ரீ.மயூரன்

### பொது அறிவு

★ **சரியான விடையின் கீழ் கீறிடுக.**

01) இலங்கை மரக்கூட்டுத் தாபனத்தின் பெயர் யாது?
1) ஒக்சல 2) லக்சல 3) சலசல 4) எக்சல

02) மொறிஷியஸ் தீவின் முக்கிய ஏற்றுமதி பொருள் யாது?
1) கடதாசி 2) சீனி
3) மணிக்கூடு 4) தேங்காய்

03) சைப்பிரஸ் எந்தக் கடலில் உண்டு?
1) செங்கடல் 2) கருங்கடல்
3) மத்தியதரைகடல் 4) சுரூபியன்கடல்

04) ரூபி இரத்தினக் கற்களுக்கு புகழ்மிக்க ஆசிய நாடு எது?
1) பர்மா 2) சிங்கப்பூர்
3) இலங்கை 4) இந்தியா

05) இத்தாலிக்கும் சிசிலிக்கும் இடையில் உள்ள நீரிணையின் பெயர் என்ன?
1) மெசினா நீரிணை 2) பாக்கு நீரிணை
3) அப்ஸ்ராம் நீரிணை 4) கடார் நீரிணை

★ **சுருக்கமான விடை தருக.**

06) ஏழ்மையாகவும் குருடர் மற்றும் செவிடராகவும் இருந்த போதும் உலக புகழ் ஈட்டிய எழுத்தாளர் யார்?————

07) ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தலைமைப்பீடம் எங்கு அமைந்துள்ளது? ——————

08) ''இஸ்லாம்'' என்பதன் பொருள் என்ன?——————

09) மாட்டின் லூதர் பேராசிரியராகப் பணியாற்றிய பல்கலைக் கழகம் யாது?——————

10) இந்தியாவில் முதல் முதல் பேரரசை நிறுவியவர் யார்? ——————

★ **சரி ஆயின் சரி (✓) எனவும் பிழை ஆயின் பிழை (×) எனவும் அடைப்பில் இடுக.**

11) ''பகோடா'' என்பது சீனநாட்டு பௌத்த ஆலயங்களைக் குறிக்கும் சொல் ஆகும் ( )

12) ''கதே'' என்பது மாலை தீவுக்கு முன்னர் வழங்கப்பட்ட பெயர் ஆகும் ( )

13) ஆங்கிலக் கால்வாயை முதன் முதல் நீந்திக் கடந்தவர் லைசமன்டி மொன்ற்போட் ஆவார். ( )

14) ஆங்கில அகராதியை முதன் முதல் தொகுத்தவர் சாமுவெல் ஜோன்சன் ஆவர் ( )

15) கி.பி.15 இற்கு முற்பட்ட காலமே வரலாற்றில் இருளடைந்த காலம் எனப்படுகிறது ( )

★ **பின்வரும் கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தியோரின் பெயர்களை கீறிட்ட இடத்தில் எழுதுக.**

16) தொலைக் காட்சி——————
17) ஊற்றுப் பேனா——————
18) தைனமோ ——————
19) தபால்தலைகள் ——————
20) புகைப்படக் கருவி——————

### நுண்ணறிவு

★ **பின்வரும் எண் கோலத்தில் இடைவெளியில் வரவேண்டிய எண்ணை கண்டுபிடித்து எழுதுக.**

21) 1, 5, 5, 10, 10, 15, ——————
22) $\frac{1}{2}$, 2, $1\frac{1}{2}$, 4, $2\frac{1}{2}$, 6, ——————
23) 60, 55, 45, 30, ——————
24) ——————, 8, 20, 38, 62
25) 1, 3, 7, ——————, 31

★ **பின்வரும் கணிதக் குறியீடுகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களை துணை கொண்டு அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

$>$ எனின் சமன் $\times$ எனின் சிறிது கூடுதலானது
$+$ எனின் கூடுதலானது $<$ எனின் சிறிது குறைவானது
$=$ எனின் குறைவானது

26) $B \times C$ எனவும் $C > D$ எனவும் இருப்பின் பின்வருவற்றுள் எது உண்மை?
1) $D = B$ 2) $D < B$ 3) $B > B$ 4) $D + B$

27) $A > C$ எனவும் $D \times C$ எனவும் இருப்பின் எது சரி?
1) $A = D$ 2) $A + D$ 3) $A \times D$ 4) $A > D$

28) $B \times CD$ எனவும் $C < BD$ எனவும் இருப்பின் எது சரி?
1) $C + B$ 2) $B = C$ 3) $B + C$ 4) $B < C$

29) $A \times B$ எனவும் $B > C$ எனவும் இருப்பின்
1) $A < C$ 2) $A = C$ 3) $A > C$ 4) $C < A$

30) $A = BC$ எனவும் $C = B$ எனவும் இருப்பின்
1) $B > A$ 2) $B = A$ 3) $B \times A$ 4) $C \times A$

★ **பின்வரும் சொற்தொடர்களில் உள்ள சொற்களில் ஒரு சொல் மாத்திரம் ஏனையவற்றுடன் வேறுபட்டது. அதன கீழ் கீறிடுக.**

31) கடகம், படகு, சடுகுடு, கடகட, தடகளம்
32) மூக்கு, கடுகு, காகம், வீடு, தென்னை
33) தண்ணீர், மண்ணெண்ணை, பக்கம், பட்டம், அந்தம்
34) கடல், மேகம், கத்தல், திடல், புசல்
35) 875, 673, 831, 880, 765

★ **மாணவர்களுக்கு பரீட்சைவைத்தல் தொடர்பாக நடைபெறும் நடவடிக்கைகளை பின்வரும் பாய்ச்சல்பட்டிகுறிப்பிடுகின்றது இந் நடவடிக்கைகள் ஒழுங்கற்ற விதத்திலேயே தரப்பட்டுள்ளன. இவற்றை வரிசைமுறையில் ஒழுங்குபடுத்தி தரப்பட்டுள்ள வரைபடத்தில் அதற்குரிய தானங்களை இடுக.**

36) [i] தேர்ச்சி அறிக்கை தயாரித்தல் □
↓
37) [ii] புள்ளிகளை ஒழுங்குபடுத்தல் ○
↓
38) [iii] வினாத்தாள் தயாரித்தல் □
↓
39) [iv] பரீட்சைமுடிய அரைமணித்தியாலம் இருக்கிறதென கூறல் ○

**அறிவியல் வினா இல:83 அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்**

★ தி. சுமங்கலா, சந்தர் மடம்.
★ உ. காந்தரூபன், அளவெட்டி.
★ சி. சிவதா, யாழ்ப்பாணம்.
★ சி. கார்த்திகா, நாவலர் வீதி, ஆனைப்பந்தி.
★ த. ரூபசங்கர், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.
★ த. கார்த்திகா, சாவ இந்துக்கல்லூரி.
★ ர. கேசவன், கொக்குவில் இந்துக்கல்லூரி.
★ பு. கோபிறாஜ் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி.
★ சி. சயந்தன், வட்டு யாழ்ப்பாணக்கல்லூரி.
★ உ. சுமலதா, வட இந்து மகளிர் கல்லூரி
★ சி. மைதிலி நல்லூர் வடக்கு யாழ்ப்பாணம்.
★ வி. தமிழ்ச்செல்வி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

## அறிவியல் வினா இல-83 விடைகள்

01) பிரெக்ஷா
02) நியூயோர்க்
03) ஹொரன் ஷா
04) சுக்கிரன்
05) கணனி
06) 1991
07) இளைஞர் விளையாட்டு கிராமிய அபிவிருத்தி அமைச்சு
08) இத்தாலி
09) மலேசியா, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, தாய்லாந்து, புருனை
10) ஜனவரி 26
11) ✓
12) ✓
13) ×
14) ✓
15) ×
16) ஜென், றின்
17) கயாட், பயாஸ்
18) வீரா, செனரெசெமி
19) பிராங், சென்நிமோஸ்
20) லிரா, குராஸ்
21) 2
22) 1
23) 3
24) 3
25) 3
26) 5
27) 66
28) 20
29) 4
30) 19
31) தினபதி
32) கணபதி
33) கணகண
34) பசுபதி
35) குலநிதி
36) அரகர
37) அலம்பி
38) நீர்
39) CDF
40) 674531

**குறிப்பு:-**
விடைகளை வேறுதாளில் எழுதி அனுப்பவும். இதற்கான விடைகளை 28.11.2001இற்கு முன் எமக்குக் கிடைக்கத் தக்கதாக அனுப்பிவைக்கவும்.

**அறிவியல் பகுதி**
**வினா இல: 84**
**"வலம்புரி"**
**இல: 15 வெள்ளாந் தெரு**
**யாழ்ப்பாணம்.**

மாணவர் முழுப்பெயர்: ——————
சொந்த முகவரி: ——————
கற்கும் பாடசாலை ——————
மாணவர் கையொப்பம் :

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

## கல்முனையில் தொடரும் தேர்தல் வன்முறைகளைக் கண்டித்து ஹர்த்தால்

(அம்பாறை)

அம்பாறை கல்முனைப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் தேர்தல் வன்முறைகளைக் கண்டித்து நேற்று முன்தினம் கல்முனை நகரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் விழிப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக் ஹர்த்தாலினால் கல்முனை நகரில்அமைந்துள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டதுடன் நகரை அண்டிய ஏனைய பிரதேசங்களிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இதனையொட்டி நிந்தவூர் பிரதான வீதியில் போக்குவரத்துக்களைத் தடைசெய்யும் வகையில் போடப்பட்டிருந்த வீதித் தடைகளை பொலிஸார் அகற்றி போக்குவரத்தை சீர் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-5)

## யாழ் குடாநாட்டிற்கு விரைவில் அனல் மின் நிலையம்

### ஜனாதிபதி உறுதி

[யாழ்ப்பாணம்]

யாழ் குடாநாட்டுமக்களின் மின்சாரப் பற்றாக் குறையை போக்குவதற்கு அனல் மின் நிலையம் விரைவில் அமைக்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா புதன் நண்பகல் யாழ். குடாநாட்டு மக்களுடன் நடாத்திய செய்மதி மூலமான உரையாடலின் போது உறுதி அளித்துள்ளார்

இச் செய்மதி உரையாடலின் போது ஜனாதிபதி சந்திரிகா மேலும்தெரிவித்திருப்பதாவது யாழ் குடாநாட்டு மக்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மின்சாரம போதுமானதாக இல்லை இதனால் அவர்களின் அசௌகரியங்களைப்போக்குவதற்கு அனல் மின்நிலையம் அமைக்கப் படவுள்ளது இதன் மூலம் குடாநாட்டு மக்கள் மின்சாரத்தை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார். [வ]

## ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு ஆய்வுகூட வசதியில்லை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய சாலையில் ஆய்வுகூடவசதியின்மையினால் நோயாளர்கள் பெருஞ் சிரமங்களை எதிர் நேக்குகின்றனர்.

இங்கு சிகிச்சை பெறச்செல்லும நோயாளர்களின் இரத்தம் பரிசோதனைசெய்ய வேண்டியிருப்பின் யாழ். போதனாவைத்தியசாலைக்கு வரவேண்டியுள்ளது.

பரிசோதனை முடிவுகள் கிடைப்பதற்கு காலதாமதம் ஏற்படுவதனால் நோய்க்கு உரிய சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதும் தாமதமாகின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு இவ்வைத்தியசாலையில் ஆய்வு கூடம் இயங்கி வந்தமை குறிப்பிடத் தக்கது.

(செ-75)

## க.பொ.த.(சா/த) பரீட்சார்த்திகளுக்கு இலவசகல்விக்கருத்தரங்கு

(செம்பியன்பற்று)

தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம், இவ்வருடம் க.பொ.த.(சா/த)பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இன்றுவெள்ளிக்கிழமை முதல் இலவசக்கல்விக்கருத்தரங்கினை நடத்தவுள்ளது.

இக்கருத்தரங்கு வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய நான்கு நாட்களில் நடைபெறவுள்ளது.

வெள்ளி பி.ப.3.00மணிக்கு கணிதம், சனி மு.ப.9.00 மணிக்கு சமூகக்கல்வி ஞாயிறு பி.ப.2.30 மணிக்கு தமிழ், பி.ப.4.00 மணிக்கு விஞ்ஞானம், திங்கள் பி.ப 3.00மணிக்கு ஆங்கிலம் ஆகிய பாடங்களில் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன. (செ-42)

## பதிவாளர் பதவிக்கான நேர்முகத் தேர்வு டிசம்பர் 18ல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் நிலவும் பதிவாளர் பதவி வெற்றிடத்தை நிரப்பும்வகையிலான நேர்முகத் தேர்வு எதிர் வரும்18 ஆம் திகதி கொழும்பு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பதவிக்கு யாழ் மாவட்டத்தில் இருந்து மூன்றுபேரும் மன்னார் மாவட்டத்தில் இருந்து ஒருவரும் விண்ணப்பித்துள்ளனர்.

இதேவேளை, யாழ் பல்கலைக்கழகத்தில் இவ் வருடம் மே மாதம் முதல் மேற்படி பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்துபதில் பதிவாளரான திருமதி நா.தங்கராஜாவே அக் கடமைகளை

### இன்று ஒரு தகவல்

# அண்ணாவின் வடநாட்டு அனுபவங்கள்

இரண்டாவது உலகப் போர் துவங்குமுன் ஒரு தருணம் பெரியார் ஈ.வே.ரா. வடநாட்டுச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். பெரியாருடன் அண்ணாவும் சென்றிருந்தார். இந்தியாவின் புரட்சித் தலைவர்களில் ஒருவர் என்று கருதப்பட்ட எம்.என். ராயுடன் அண்ணாவுக்கு அங்கு தொடர்பு ஏற்பட்டது. வடநாட்டில் பெரியார் செய்த தமிழ்ச் சொற்பொழிவுகளை எல்லாம் அண்ணா ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். ஆங்கில மொழியில் அண்ணா பெற்றிருந்த ஆற்றலைக்கண்ட பலர் பல இடங்களில் அண்ணாவையே தனியாகச் சொற்பொழிவு நடத்த அழைத்தனர். அத்தகைய வேண்டுகோள்களை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

வடநாட்டுச் சுற்றுப் பயணத்தின்போது அண்ணாவுக்குப் பல அனுபவங்கள் ஏற்பட்டன. பெரியாருடன் கல்கத்தாவில் ஹூக்ளி ஆற்றில் அண்ணா படகில் பயணம் செய்தார். அங்கு படகிலேயே தேநீர்விற்கப்பட்டது. அண்ணா தேநீர் கேட்டார். ''உன்னைப்பார்த்தால் இந்து மாதிரி இருக்கிறாய். உனக்குத் தேநீர் கொடுக்க முடியாது'' என்று கூறிவிட்டார். அவர் ஒரு முஸ்லிம். பஞ்சாபில் அண்ணா பெரியாருடன் சுற்றுப்பயணம் செய்தபோது அங்கே ஓர் இடத்தில் பழையகாலக் கட்டடத்தில் நிறைய பள்ளங்கள் தென்பட்டன. கூடவந்த வழிகாட்டியிடம் ''இதெல்லாம்என்ன''? என்று அண்ணா கேட்டார் அதற்கு அந்த முஸ்லிம் வழிகாட்டி ''இங்கே விலையுயர்ந்த மாணிக்கம், இரத்தினம் போன்ற கற்கள் புதைக்கப் பட்டிருந்தன; அதையெல்லாம் இந்துக்கள் படையெடுத்தபோது பெயர்த்து எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள்'' என்று சொன்னான். அடுத்த சில நிமிடங்களில் அதே இடத்தைப் பற்றி ஓர் இந்து வழிகாட்டி ''முஸ்லிம்கள் படையெடுத்து வந்தபோது விலையுயர்ந்த கற்களைப் பெயர்த்துக் கொண்டு போய்விட்டார்கள்'' என்று கூறினான்.

அந்த இரண்டு கருத்துக்களையும் கேட்ட அண்ணாவுக்கு இந்து, முஸ்லிம் பிரச்சினையின் சிக்கல்கள் தெளிவாகப் புரிந்தன. பெரியாருடன் அண்ணா காசிக்குச் சென்றபோது வேடிக்கையான நிகழ்ச்சியொன்று நடந்தது. பெரியார் தாடி வைத்துக்கொண்டு முன்னால் சென்றார். அவருக்குப் பின்னால் குளிரின் காரணமாகக் கையைக் கட்டிக்கொண்டு அண்ணா சென்றுகொண்டிருந்தார். தாடியுடன் இருந்த பெரியாரைப் 'பெரிய சாமியார்' என்றும் அவர்பின்னால் அடக்க ஒடுக்கமாகச் சென்றுகொண்டிருந்தஅண்ணாவைச் 'சின்னச் சாமியார்' என்றும் கருதி அங்கிருந்த மக்கள் பயபக்தியுடன் கும்பிட்டார்கள். □

நவீனன்

### தலிபான்களை வெற்றிகொள்ளும்

# வடக்கு கூட்டணிபோன்றுபுலிகளை வெல்ல, தெற்கு கூட்டணிதேவை

## சிஹல உறுமயவின் விருப்பம் இது

(கொழும்பு)

ஆப்கானிஸ்தான் வடக்கு கூட்டணி தலிபான் பயங்கரவாதிகளை வெற்றிகொண்டு வருகிறது. இலங்கையில் ஒரு தெற்கு கூட்டணி இருந்தால் புலிகளைத் தோற்கடிக்கலாம் என்று சிஹல உறுமய கட்சியின் சம்பிக்க ரணவக்க பிலியந்தலாவையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம்ஒத்திவைக்கப்பட்டு நெருக்கடி நிலவிய போது சகல கட்சிகளினதும் தேசபக்த சக்திகள் ஒன்று சேர்ந்து தேசியவாத அரசாங்கமொன்றை அமைக்குமுன் வருமாறு கேட்டோம்.

ஆனால் அம்முயற்சியைஜே.வி.பி கெடுத்து விட்டது அது பொ.ஐ முன்னணியின் அரசுக்கு முண்டுகொடுக்க முன் வந்ததால் அம் முயற்சி கைவிடப்பட வேண்டியதாயிற்று

வடக்கு கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தி கொடுப்பதாக ஐ.தே.க கூறுகிறது. கொடுப்பது சுலபமான வேலைதான் ஆனால் திரும்ப பெறுவது தான் முடியாத காரியம்

1987இல் வடக்கு கிழக்கு இணைப்பை தற்காலிகமாக ஏற்படுத்தியது அன்றைய ஐ.தே கட்சி அது தொடர்பாக மக்களின் கருத்தை அறிவதற்கான கருத்துக் கணிப்பு 1988டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் நடைபெறும் என்று அறிவித்தார்கள்

பதின்மூன்று வருடங்கள் சென்று விட்டன கருத்துக் கணிப்பு எங்கே? இடைக்கால அரசுக்கும் அதுவேநடக்கும் புதிய அரசியற் சீர் திருத்தங்கள் மூலம்நாட்டை 8பகுதிகளாக பிரிப்பதற்கு சந்திரிக்கா முயற்சிக்கின்றார். இதனால் நாடு இரத்தக் காடாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார் (உ)

# புன்னாலைக்கட்டுவனுக்கு கேபிள்தொ.பே. இணைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ரெலிக்கொம் நிறுவனத்தினால் கேபிள் தொலைபேசி இணைப்புக்கான கம்பிகள் இழுக்கும் பணி பலாலி வீதி வழியாக புன்னாலைக் கட்டுவன் வரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டாலும் உடனடியாகக் கேபிள் இணைப்புக்கள் வழங்க முடியாது என்று புதிய தொலைத் தொடர்பு கருவிகள் வந்து சேர்ந்ததும் பரிவர்த்தனை நிலையம் அமைக்கப்பட்டு கேபிள் இணைப்புக்கள் உடனடியாக வழங்கப்படும் என்றும் இதற்கான முன் ஏற்பாடாகவே இப்பணிகள் இடம் பெற்றுவருவதாகவும்ரெலிக்கொம் வட்டாரங்க தெரிவித்தன.

இதேவேளை, புதிய பரிவர்த்தனை நிலையம் அமைக்கப்பட்டதும் 5ஆயிரத்திற்கு மேற்பட்ட கேபிள்இணைப்புக்கள் வழங்கப்படும்என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-2)

# முன்னாள் ஐ.தே.க. எம்.பி போதிநிலமேயைக் கைது செய்ய உத்தரவு

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்ட வேட்பாளரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுசந்த போதிநிலமேயைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் கடந்த திங்கள் உத்தரவிட்டுள்ளது.

பிரதேசத் தலைவர் ரஞ்சித் சில்வா உட்பட ஒரு குழுவினருக்கு பலத்த காயம் ஏற்பட்ட சந்தேகம் தொடர்பாக இவர் கைது செய்யப்படவுள்ளார்.

எம்பிலுப்பிட்டிய நீதிவான் நீதிமன்று இவரைக் கைது செய்து29 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறும் பொலிஸாரைப் பணித்துள்ளது.

இச் சம்பவத்தில் காயம் அடைந்த ஆறு பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளை, புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் பாலித்த ரங்கபண்டாரவையும் கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது இவர்களது கைதுகள் தொடர்பாக விசேட பொலிஸ் குழு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. (வ)

# உள்ளூர் தேர்தல் கண்காணிப்பாளர்150பேர் வவுனியாவில் கடமை

(வவுனியா)

அடுத்த மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை ஒட்டி வவுனியா மாவட்டத்தில் சுமார் 150 உள்ளூர்தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

உள்ளூர்த் தேர்தல் கண்காணிப்பு அமைப்பினை 'பவ்ரல்' சர்வோதய அமைப்புடன் இணைந்து இக் கண்காணிப்புக்களை மேற்கொள்ளவுள்ளது. (வ)

# இராணுவச் சிப்பாய் பிணையில்செல்ல அனுமதி

(மந்திகை)

பளைப் பகுதியில், பெண்ணொருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு 5 வருடங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இராணுவச் சிப்பாயை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

பளை, ஆனை விழுந்தான் பகுதியில் 46 வயதுடைய பெண்ணொருவர் கடந்த 1996 ஆம் வருடம் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தில் கைதுசெய்யப்பட்டு பலாலி இராணுவ பொலிஸ் தடுப்புமுகாமில் வைக்கப்பட்டிருந்த அன்ரனி கிருஸ்டி நிமல் என்றசிப்பாயே கடந்த வியாழன் அன்று சாவகச்சேரி நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (உ-23)

# திசைஅறி கருவி பொருத்தப்படாமையால் படகு கடலில் தத்தளிப்பு

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதிகளுக்கான போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் படகுகளில் திசை காட்டி இல்லாமையினால் திசையறியாது நடுக்கடலில் தத்தளிக்க வேண்டிய நிலைமை ஏற்படுவதாக பயணிகளால்புகார் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் அனலைதீவில் இருந்து ஊர்காவற்றுறை நோக்கிச்சென்று கொண்டிருந்த பயணிகள் படகு ஒன்று கடும் மழை காரணமாக திசை தெரியாது நடுக்கடலில் நங்கூரமிட்டு நின்றது.

நீண்டநேரம் மழையில் நனைந்தபடியேபயணிகள படகில் இருந்தனர்.

படகுகளில் திசையறி கருவி பொருத்தப்படாது இருந்தமையினாலேயே இந் நிலைஏற்பட்டது. இது குறித்துசம்பந்தப்பட்டவர்கள் கவனம எடுக்கவேண்டும் என பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (செ-75)

# விண்ணப்ப முடிவுத்தினம் 27ஆம் திகதி

[யாழ்ப்பாணம்]

மாகாண எழுதுநர். பண்டகசாலைக்காப்பாளர், சுருக்கெழுத்தாளர் தரம் 2, தட்டெழுத்தாளர் சேவையின் வகுப்பு 2 ஆகியோருக்கான வினைத்திறன்காண்பரீட்சைக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர்அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் அனுப்பப்படும் அனைத்து விண்ணப்பங்களும் திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்படவேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுளளது. (உ-5-19,

# மாணவன் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவன் சாந்திராஜ் டிரோசன் (வயது 18)நேற்று முன்தினம் யாழ் மாவட்டநீதிமன்ற நீதிவான் இ.த. விக்னராஜா முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 18ந்திகதி இருபாலை கிழக்கில் உள்ள அவரது வீட்டில் வைத்து கோப்பாய் பொலிசாரால் கைது செய்யப்பட்ட இவர் நேற்றுமுன் தினம்யாழ் நீதிமன்றில்ஆஜர் செய்யப்பட்டு விடுதலைசெய்யப்பட்டுள்ளார். (இ-9)

# சங்கரின் வாகனத்தை ஒப்படைக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மா.சங்கர் தொடர்பான வழக்கு கடந்த செவ்வாய் யாழ் நீதிமன்றில்இடம் பெற்றது.

இவரிடம் இருந்து பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்ட ஹைபஸ் வாகனத்தை உடனடியாக உரியவரிடம் ஒப்படைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டதுடன்,

இவர் தொடர்பான வழக்கிற்குஆதாரமாக சட்ட வைத்திய அதிகாரியின் வைத்திய அறிக்கையினைஉடன் நீதிமன்றுககு அனுப்பிவைக்கும்படியும உத்தரவிடப்பட்டது.

சங்கர் தொடர்பானவழக்கு உயர்நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுளளதும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

# பருவமழை காரணமாக மைற்ஸ் நோய் தடுப்பு நடவடிக்கை ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

பருவமழை காரணமாக மைற்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு கிருமிநாசினி விசிறப்படும் நடவடிக்கைகள் பாதிப்படைந்துளளது,

பருவமழை காரணமாக தென்னைமரங்களில் தண்டுக்கசிவு அல்லது சாறுகள் வடிதல் போன்ற நோய்களை அவதானித்தால் தென்னை வள சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. சத்தியேந்திரா கேட்டுள்ளார்.

இதேவேளை தென்னை மரங்களில் அவதானிக்கப்படும் மைற்ஸ்நோய் 85வீதம் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (உ-19,4)

## சிந்தனைக்கு விருந்து

### கண்ணி வெடியும் தீயோர்களும்

பதுங்கி ஒளித்துக்கால் பட்டால் வெடித்து
மதங்கொண்டு கால்கையை வாங்கும் - இதுநிலக்
கண்ணிவெடி தீயோர்கள் காத்தொளித் தேயிருந்து
பண்ணும் இடர்க்கிது நேர்.

'பழையவன்'

# ஆப்கானுள் மேலும் தொகையான அமெ. படைகள் தரையிறக்கம்

(வாஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள தமது படைகளுடன் மேலும் இரண்டாயிரத்திற்கும் அதிகமான துருப்பினரை தரையிறக்கும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

பாகிஸ்தானின் கரையோரத்திற்கு அப்பால் விமானந்தாங்கிக் கப்பல்களில் நிலைகொண்டுள்ள விசேட அமெரிக்கப் படையினரையே ஆப்கானிஸ்தானில் தரையிறக்கும் முயற்சியில் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஆனாலும் அங்கு நீண்ட நாட்களுக்கு தமது துருப்பினரை பணியில் ஈடுபடுத்துவதை அமெரிக்கா விரும்பவில்லை யெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை. ஒஸாமா பின்லேடனையும் அவரது அல் கெய்டா, அமைப்பையும் வேட்டையாடியேதீருவதென அமெரிக்க பாதுகாப்புத்துறையினர் கங்கணம்கட்டி நிற்பதாக சர்வதேச பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-5)

# ஆப்கானில் 5 ஆண்டுகளின் பின் இந்தியதூதரகம் திறப்பு

(காபூல்)

ஐந்தாண்டுகளின் பின் ஆப்கானில் இந்தியத்தூதரகம் மீண்டும் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

முன்னர் ஆப்கானில் வடக்குக் கூட்டணியினரின் ஆட்சியில் இயங்கி வந்த இந்தியத் தூதரகம், தலிபான்கள் ஆட்சிக்கு வந்தவுடன் செலிழந்தது.

மீண்டும்தற்போது, காபூலில் வடக்கு கூட்டணியின் ஆட்சியில் நேற்று முன்தினம்திறந்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-7

# 94 வயது முதியவரும் அந்திரெக்ஸினால் மரணம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் அந்திரெக்ஸ் நோய்காரணமாக இன்னுமொருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

94 வயதுடைய யூமன் கியூபட் என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் அந்திரெக்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டு இதுவரை 5 பேர்பலியானதுடன், 18 இற்கும் அதிகமானோர் கடும் நோயினால் பாதிப்படைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

# மத்திய கிழக்கு விவகாரம் விரைவில் முத்தரப்பு பேச்சு?

(ஜெருசலேம்)

மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பாகபேச்சுவார்த்தை நடத்த இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் அடுத்த மாதமளவில் அமெரிக்கா செல்லவுள்ளார்.

அமெரிக்காவுக்கு சென்று அதிபர் ''புஷ்'' உடன் இது பற்றி பேசவுள்ள ஷரோன், மத்திய கிழக்குவிவகாரத்தில் பலஸ்தீன தரப்பிற்கு சாதகமான விடயங்கள் எதற்கும் தான் சம்மதிக்கமாட்டேன் என்று இஸ்ரேலிய தொலைக்காட்சி ஒன்றில் மக்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவில் இடம்பெறவுள்ள இப்பேச்சுவார்த்தைக்கு பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத்தையும் அதிபர் புஷ் அழைக்கலாம் என்று மத்தியகிழக்கு நாடுகளில் பேசப்படுகிறது.

எனினும் அடுத்தமாதம் 3 ஆம் 4 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இப்பேச்சில் அரபாத்தும் கலந்து கொண்டால்அமுகமான தீர்வு ஒன்று கிடைக்கும் வாய்ப்பு உள்ளதாகவும் சர்வதேச ரீதியில் கருதப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)


## ஊர்காவற்றுறை பிரதேச சபை

## வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரினால் பின்வரும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரங்கள் 03-12-2001 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்த ஒப்பந்தகாரர்களும், பொது ஸ்தாபனங்களும் பின்குறிப்பிடும் தொகையை செலுத்தி கேள்வப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.
2. கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்பவர்கள் கணிய அளவுச் சிட்டை வொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்க கூடியவர்களாக இருத்தல்வேண்டும்.
3. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் தலைவர், ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை என முகவரியிட்டு பதிவு தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேளவிப் பெட்டியில் இட்டு இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம் அவர்கட்கு 07-12-2001 நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
4. கேள்விகள் 07-12-2001 ம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு திறக்கப்படும் அச் சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
5. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.
6. மேலதிக விபரங்களை ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம.

| தொ. இல. | வலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | பொருட்கள் சேவைகள் மீதான வரி |
|---|---|---|---|---|
| 1. | ஊர்காவற்றுறை முகாம் வீதி வைரவகோயில் புனரமைப்பு | 1000.00 | 100.00 | 12.50 |
| 2. | தம்பாட்டி சனசமூக நிலைய புனரமைப்பு | 1000.00 | 100.00 | 12 50 |
| 3. | கரம்பன் கிழக்கு ஞானவைரவர் சனசமூக நிலையக்கட்டிடம புனரமைப்பு | 1000.00 | 100.00 | 12.50 |
| 4. | காரைநகர் அன்பரசன் சனசமூக நிலைய கட்டிடம புனரமைப்பு | 1000.00 | 100.00 | 12.50 |
| 5. | ஊர்காவற்றுறை பருத்தியடைப்பு சனசமூக நிலைய புனரமைப்பு | 1000.00 | 100.00 | 12.50 |
| 6. | கரம்பன் மேற்கு முருகமூர்த்தி கோயில் புனரமைப்பு | 1000.00 | 100.00 | 12.50 |

நா. திருச்செல்வம்
உப தலைவர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

ஊர்காவற்றுறை பிரதேச சபை,
ஊர்காவற்றுறை.
21-11-2001

(கி-2911)



## ஜனநாயக இடதுசாரி முன்னணி
## (புதிய ஜனநாயக கட்சி)
# தேர்தல் பிரசாரக் கூட்டம்

இடம்: புத்தூர் சந்திக்கு அருகாமையில் (யாழ்-பருத்தித்துறை வீதியில்)


காலம்: இன்று 23 - 11 - 2001 வெள்ளி பி. ப. 4 மணிக்கு

தலைமை: கா. கதிர்காமநாதன் (செல்வம்) (கோப்பாய்த் தொகுதி வேட்பாளர்)

உரையாற்றுவோர்

சி. கா. செந்திவேல் முதன்மை வேட்பாளர்
சோ. தேவராஜா சட்டத்தரணி-வேட்பாளர்
க. ஆனந்தகுமாரசுவாமி வேட்பாளர்
மு. தியாகராசா வேட்பாளர்
வீ. ரகுநாதன் வேட்பாளர்
க. வேலும்மயிலும் வேட்பாளர்
மற்றும் பலர் உரையாற்றுவர்

அனைவரும் திரண்டு வருக!



புதிய ஜனநாயக கட்சி
கோப்பாய் தொகுதி மக்கள்

(3994)




# பொதுத் தேர்தல்-2001



தமிழினம் தலை நிமிர்ந்து நின்றிட
எங்கள் கூட்டுறவாளன்
திரு. சி. சிவமகாராசா
அவர்களுக்கே எம் வாக்கு



தமிழர் விடுதலைக் கூட்டணி





(கி-2898)

என்னை முன் நில்லன் மின் தெய்விர் பலர் என்னை முன் நின்று கல்நின் றவர்

குறள்

# வலம்புரி

## போலிப் பதவிக்காக

ஈழப் போராட்டத்தின் வரலாற்றுப் பாதையில் மாவீரர்களின் தியாகங்கள் புனிதப் பயணமாகவே தமிழ் மக்களால் கருதப்படுகிறது.

தமிழ் மக்கள் சுதந்திரமாக, சுபீட்சமாக, இன்பமாக வாழவேண்டுமென்பதற்காக எதிரியின் வேட்டுக்களை தன் நெஞ்சில் சுமந்த தியாகத்திற்கு ஈடாக - இணையாக எதுவுமே இருக்க முடியாது.

ஒரு போராளி தன் தாயை, தந்தையை, சகோதரங்களை உறவுகளை விட்டு போர்க்களம் சென்று களமாடினாரெனில் அத் தியாகத்தின் எல்லையை அளவிடும் தகுதி இன்னோர் தியாகிக்கு, போராளிக்கு போராளியை ஈர்ந்தளித்த பெற்றோர்க்கு இருக்க முடியுமேயொழிய, வேறு எவர்க்குமே இருக்க முடியாது.போர்களத்தில்தான் பிறந்த மண்ணை தன் குருதியால் நனைத்து வித்துடலை விதைத்துவிட்ட தியாகத்தின் பின்னால் இருக்கக்கூடிய அந்த அற்புதமான சுதந்திர உணர்வுகளை ஒரு கணம் எண்ணின் கண்களின் ஓரம் நனையவே செய்யும்.

ஆனால் சிங்களப்பாராளுமன்றில் எதனையுமே சாதிக்க முடியாத பதவிக்காக இன்று யாழ்ப்பாணத்தில் தியாகிகளின் பெயர்கள் உச்சரிக்கப் படுகிறது.

தமது பிள்ளைகளை- குடும்பத்தை வெளிநாடுகளில் சுகபோகமாக-பாதுகாப்பாக இருத்தி விட்டு இங்குவந்து தியாகம்பேசும் கபடம் நிறுத்தப்பட வேண்டும், தடுக்கப்பட வேண்டும்.

ஆலயத்தின் பெயரைக் கூறி அன்ன சத்திரத்திற்கு அரிசி கேட்கும் போலிச் சாமிகள் போல், தியாகிகளின் பெயரைக்கூறி வாக்குக் கேட்கும் செயலை வேட்பாளர்கள் கைவிட வேண்டும்.

தத்தம் கட்சிகளின் கொள்கைகளை மக்கள் முன்வைத்து அதற்குரிய விளக்கங்களை வழங்குவதன் மூலம் தேர்தல்செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டுமேதவிர எல்லையற்ற தியாகங்களின் சொந்தக்காரர்களான மாவீரர்களின் நாமங்களை எவருமே போலிக் கூத்துக்காக உச்சரித்து விடாதீர்கள்.

ஏனெனில் தியாகிகள் வழிபாட்டிற்குரியவர்கள். அவர்களின் நாமம் புனிதமான வேட்பாளர்களால் உச்சரிக்க முடியும் ஆனால்...?

# சிங்கள மக்களுக்கு இருக்கும் உரிமைகள்

# அனைத்தும் எமது தமிழினத்திற்கு வேண்டும்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திட்டவட்டமாக தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிங்கள மக்களுக்குஇருக்கும் அதேயளவு உரிமைகள் இந்த நாட்டில் எங்கள்தமிழருக்கும் இருக்க வேண்டும். இது தான் நாம் சர்வதேசங்களுக்குக் கூற விரும்பும் செய்தி.

இதற்கு மேலாக ஒன்றையும் நாம் கேட்கவோ எதிர்பார்க்கவோ இல்லை.

கடந்த ஞாயிறன்று மாலை அரியாலை கலைமகள் சனசமூக நிலையத்தில் இடம் பெற்ற பரப்புரைக் கூட்டத்தில். நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிடும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரையாற்றுகையில்இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில்,சிங்கள மக்கள் ஒருதனித்துவமானதேசிய இனமாக இலங்கையில் உள்ளனர் வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனையவை அவர்களின் தாயகம். அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு.

நாங்கள் சிங்கள தேசிய இனத்தைக் கேட்பது என்னவென்றால், நீங்கள் அனுபவிக்கும் அதேயளவு உரிமைகளை தமிழ்த்தேசிய இனத்திற்கும் தாருங்கள் அவற்றை அனுபவிக்க வழிவிடுங்கள்.

இதற்கு மேலாக நாங்கள் எதையும்எதிர்பார்க்கவில்லை அதற்குக்குறைவாக எதையும் ஏற்றுக்கொள்ளவும் மாட்டோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களிடமிருந்து வேறுபடுத்தி, ஒதுக்கும் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

எமது இளைஞர்கள்ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கிய நாள் முதல் இது நடந்து கொண்டிருக்கின்றது. இப்பொதுத் தேர்தலின் மூலம் நாங்கள் முழு உலகிற்குமே எமது உண்மையான நிலைப்பாட்டைத் தெட்டத் தெளிவாக அடித்துக் கூற விரும்புகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கோட்பாடு தான் முழுத் தமிழ்த்தேசிய இனத்தின் கோட்பாடாகும் என்பதே எமது நிலைப்பாடு.

தமிழ் தேசியப் பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினை, அதற்கு அரசியல் தீர்வுதான் தேவைஎன்றுநம்புகின்றோம். இது ஒரு புறம் தமிழ் தேசிய இனத்துக்கும் மறுபுறம்சிங்கள தேசிய இனத்துக்கும் இடையிலான ஒரு பிரச்சினையே ஆகையால், இவ்விரு தேசிய இனங்களின் பிரதிநிதிகளோ ஒன்றாக அமர்ந்து பேச்சுவார்த்தை நடாத்தி இதற்கு ஒருஅரசியல் தீர்வைக் காண வேண்டும்.

இப்பொதுத் தேர்தலைப் பொறுத்த மட்டில், நாங்கள் எமது விடுதலைப் போராட்டத்தின் ஒரு அதிமுக்கிய கட்டத்திற்குள் பிரவேசிக்கின்றோம். இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, முழு உலகிற்கும் நாங்கள் ஒரு முக்கிய செய்தியை அனுபப வேண்டும்.



தமிழ் மக்களில் பெரும்பாலானோர் ஐக்கிய தேசியக் கட்சியையும பொது ஜன ஐக்கிய முன்னணியையும் எதிாக்கின்றார்கள் என்பது நன்கறிந்த விஷயம். அப்படியானால் அவ்விரு கட்சிகளை ஆதரித்துஅக்கடசிகள் அரசாங்கம் அமைக்க உதவும் தமிழ் அடிவருடிக் கட்சிகளுக்கும் நாம் வாக்களிக்கக்கூடாது என்பது பற்றி மிகவும் கவனமாக இருகக வேண்டும்.

அப்படியான தமிழ்க்கட்சிகளுக்கு வாக்களிப்பது. அந்த இரு பேரினவாதக் கட்சிகளாகிய ஐக்கிய தேசிய கட்சிக்கும் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும் வாக்களிப்பதற்குச் சமம் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது என்று குறிப்பிட்டார். (உ)

### பாதிப்புற்றோர் சார்பில்

# பாராளுமன்றில் குரல் கொடுக்க எமதுபிரதிநிதித்துவம் அவசியமானது

## செந்திவேல் வலியுறுத்திக் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

எம்மைப் பொறுத்தவரை கடந்த காலங்களில நேர்மையான நிலையில் நின்று அரசியல் வெகுஜனப் போராட்டங்களையும் தொழிற்சங்க- மனித உரிமைகளுக்கான இயக்கங்களையும் முன்னெடுத்து தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளை நிலைநாட்டிய பாரம்பரியத்தை உடையவர்கள் என்பதை மக்கள் அறிவார்கள்.

இவ்வாறு சுன்னாகம் மயிலணியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய புதிய ஜனநாயகக் கட்சியின் முதன்மை வேட்பாளர் சி.கா. செந்திவேல் கூறினார்.

கோப்பாய் தொகுதி வேட்பாளர் கா. கதிர்காமநாதன் தலைமையில்நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் செந்திவேல் தொடர்ந்தும் உரையாற்றும் போது;

இன்று தமிழ்த்தேசியஇனத்தின் அடிப்படை அபிலாஷைகளுக்காக விட்டுக் கொடுக்காத போராட்டத்தை நடாத்தி வருபவர்கள் விடுதலைப் புலிகள இயக்கத்தினர்.

அப்போராட்டம் எந்த வகையிலும் பலவீனமடையவோ, தோற்கடிக்கப்படவோ கூடாது. அப்போராட்டத்திற்குச் சமமான அரசியல் வெகுஜனப் போராட்டம் தமிழ் மக்களிடையே கட்டிவளர்க்கப்பட்டு பரந்த அடிப்படையில் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

அதற்கான அரசியல்நிலைப்பாடு தமிழர் கூட்டமைப்பு என்று கூறித் தேர்தலில் வாக்குகள பெற நிற்கும் கட்சிகளிடம் இல்லை. அவ்வாறு நாம் துணிந்து கூறுவதற்கு காரணம் அக்கட்சிகளினதும் தலைவர்களினதும் கடந்த காலத்தின் தவறான தலைமைத்துவ நடைமுறைகளேயாகும்.

அவர்கள் இழைத்த பாரிய தவறுகள் பேரினவாதிகளுககு வாய்பபான தீனியாக அமைந்து கொண்டது மட்டுமன்றி அத்தகைய பேரினவாத சக்திகளுடன் பேரமபேசி ஐக்கியம் கண்டு அடிபணிந்த அரசியல் நிலைபபாட்டையும் எடுத்துக் கொண்டனர் என்பதை வரலாறு பட்டறிவாக மக்களுக்கு எடுத்துக் கூறி நிற்கிறது.

பரந்த போராட்ட அனுபவங்களும் பட்டறிவுகளும் எம்மிடம் உண்டு. நாங்கள் கடந்த காலங்களில் பாராளுமன்றம் நாடி நின்றவர்கள அல்ல. அன்று அதற்கான தேவையும் எமக்கு இருக்கவில்லை.

ஆனால் இன்று தமிழ்த் தேசிய இனத்தின் மீதான பேரினவாத ஒடுக்குமுறையும் தொழிலாளர்கள, விவசாயிகள், மீனவர்கள்; தாழ்த்தப்பட்ட மக்கள் என்போரின் அபிலாசைகளைப் பிரதிபலிப்பதற்கும் பாராளுமன்றத்தில் அம் மக்கள் சார்பான குரல் ஒலிப்பதற்கும் எமது பிரதிநிதித்துவம் அவசியமானதாகும்,

## தினசரி தியானம்

## ஐம் பெருவேள்வி

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.

திருக்குறள்

பலவடிவங்களில் இருக்கும் பரம் பொருளுக்குஎன்னைப் பண்புடன் பகுத்துக் கொடுத்து விடுவேனாக,

நித்தம் செய்யும் பரம் பொருள் வழிபாடே தேவயக்ஞம். பக்தியுடன் பனுவல் படிப்பது ரிஷியக்ஞம் பெறறோர்க்குப் பணிவிடை செய்வதும் காலஞ்சென்ற முன்னோர்க்கு நல்லெண்ணம் செலுத்துவதும பிதிர் யக்ஞம். மக்களுக்குத் தொண்டு புரிவது நரயக்ஞம், மற்ற உயிர்களிடத்து அன்பாயிருப்பது பூதயக்ஞம். இவ்வைந்தும் பெருவேள்விகளாம்,

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்.

## தேர்தல் வியூகம்

எமதுபுதிய ஜனநாயகக்கட்சி என்பதுகளில் இருந்து சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழ்த்தேசிய இனத்தின் அனைத்து உரிமைகளும் வழங்கப்படவேண்டும். என தொடர்ச்சியான இயக்கம் நடாத்திவருகின்றது.

வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்ட தமிழர்களின் பாரம்பரிய தாயக பூமியிலே பூரண அதிகாரமுடைய சுயாட்சி நிறுவப்பட்டு தமிழர்கள் தமது சொந்த விவகாரங்களைத் தாமே நடத்திச் செல்வதற்குரிய அடிப்படைகள் தேடப்படவேண்டும்.

அதுவே நியாயமானதும் நிலைக்கக் கூடியதுமான அர்த்தமுள்ள அரசியல் தீர்வாக இருக்கமுடியும். இதற்கான வெகுஜன அரசியல் போராட்டத்தளம் பரந்த அடிப்படையிலும் நேர்மையான அரசியல் திசைமார்க்கத்தில் முன்னெடுப்பதையே எமதுகட்சி இத் தேர்தலில் வற்புறுத்தி நிற்கின்றது. (உ)

## மரணமானோர் தொகை 3 ஆக உயர்வு

கடந்த 20ஆம்திகதி பூனாவையில் ஜீ. ஒன்று கண்ணிவெடியில சிககிய சம்பவத்தில் காயமடைந்தவர்களில் மேலும் இரு பொலிஸார் இறந்துள்ளதாகவும், இதனால் இச் சம்பவத்தில் இறந்தவர்களின் தொகை மூன்றாக உயர்ந்துள்ளதாகவும் விசேட ஊடகத் தகவல் மையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது; (உ)

## புலிகளின் பகுதியிலிருந்து தேர்தலில் வாக்களிக்க 25000பேர் வவு.வருவர்?

(வவுனியா)

அடுத்தமாதம் 5ம்திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்காக இம்முறை இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசத்தில் இருந்து சுமார்25 ஆயிரம்பேர் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு வரவிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒன்றரைலட்சம் வாக்காளர்களைக் கொண்ட வவுனியா,முல்லைத்தீவு,மன்னார் மாவட்டங்களில் இருந்தே இவர்கள் பிரமணலங்குளம் இராணுவச்சோதனைச்சாவடியூடாக வவுனியா வரவுள்ளனர்.

இதேவேளை தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த வேட்பாளர்கள் வன்னிசென்று தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்தால் இளைஞர் யுவதிகளுக்கு ரூ 2000 வழங்கப்படும்- ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இந் நாட்டில் வாழுகின்ற இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் மாதாந்தம் இரண்டாயிரம் ரூபா வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக்கும் என்று கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் மாதாந்தக் கொடுப்பனவு வழங்குவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்பு மாநகரசபை மைதானத்தில் இளைஞர் படையணி ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஆரம்பித்து வைத்து பேசும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் தொழில்பயிற்சிகள், தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முன்னதாக இளைஞர்களுக்கு கல்வி கற்பதற்கு இரண்டாயிரம் ரூபா வழங்கப்படும் என்று கூறினார். [வ]

## ஸ்ரான்லிவீதிச் சம்பவத்தில் கைதான ஈ. பி. டி. பி. -ஐ. தே. கட்சி ஆதரவாளர்கள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஸ்ரான்லி வீதிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் வன்முறைச்சம்பவத்தினை அடுத்து கைது செய்யப்பட்டு யாழ். பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈ.பி.டி.பி மற்றும் ஐ.தே.கட்சிஆதரவாளர்கள் விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டதாக யாழ் பொலிஸ்நிலைய அதிகாரி ஆனந்தசெனிவிரட்ணா தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் இருகட்சிகளையும் சேர்ந்த ஆறு ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

இச் சம்பவம் தொடர்பானவிசாரணை முழுமையாக இடம்பெற்ற பின்னர் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதேவேளை இச்சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்பட்டு சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் இரண்டும் உரியவர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-10]

### ஐ.தே.கட்சி

பொது மக்கள் சாட்சிஎன்றும் தெரிவித்துள்ளார்.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

எமது பிரசார வாகனம் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கருகாமையில் நின்று தேர்தல் துண்டுப் பிரசுரங்களை கடை கடையாகச் சென்று எமது கட்சி ஆதரவாளர்கள் விநியோகித்துக் கொண்டிருந்தனர் அவ்வேளை அந்த இடத்திற்கு சட்ட விரோத ஆயுதக் குழுவான ஈ.பி டி.பியினர் இலக்கத் தகடு இல்லாத வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வந்து எமது பிரசார வாகனத்தையும்துண்டுப் பிரசுரம் விநியோகித்த எமது ஆதரவாளர்களையும் தாக்கினர் இதனை ஸ்ரான்லி வீதி வர்த்தகர்கள், வங்கி உத்தியோகத்தர்கள்,தபால்ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் நேரில் கண்டனர்

இவர்கள் அனைவருக்கும் இந்த உண்மை நிலை நன்கு தெரியும்

எம்மிடமிருந்து வாள் கத்திகள் கைப்பற்றியதாக ஈ பி. டி.பி கூறுவது முற்றிலும் பொய்யானது நேரில் கண்ட மக்கள் இதற்குசாட்சியாவர்.

வேட்பு மனுத் தாக்கல் செய்ததிலிருந்து இன்று வரை ஈ.பி டி.பியின் பதாதைகள் கொடிகள் மற்றும் அவர்களுக்குச்சொந்தமானஎவற்றையும் ஐ தே கட்சி சேதப்படுத்தியது கிடையாது.

ஆனால் சட்ட விரோதஆயுதக் குழுவான ஈ.பி டி.பியின் குண்டர்கள் தான் ஐ தே. கட்சிக்கு எதிரான வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர்.

இவர்கள் எமதுவேட்பாளர்களின் வீட்டு மதில்கள் நுழைவாயில் கதவுகளில் தூஷண வார்த்தைகளை எழுதுவதுடன் கொலை மிரட்டலும் விடுகின்றனர்.

கடந்த தேர்தலில் காரைநகர்ப் பகுதியில் இவ்வாறான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டது. இதனால் காரைநகர்ப் பகுதியில் கடந்தமுறை ஈ பி டி.பியினர் படுதோல்வியைச் சந்தித்தனர் இம் முறை யாழ் குடா நாடு தீவகம்பூராகவும் இவர்களின் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது

இதனூடாகஇம்முறைஈ.பி டி.பி படுதோல்விகாண்பது உறுதியாகியுள்ளது

டக்ளஸ்தேவானந்தாதலைமையிலான குண்டர் குழுஇங்கிருந்து வெளியேறும் நிலை வெகு தொலைவில் இல்லை என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ந)

## மட்டு-வேட்பாளருடன் நான்கு ஆதரவாளர்கள் கடத்தப்பட்டனர்

(மட்டக்களப்பு)

புதிய இடதுசாரி முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை மற்றும் மாற்று அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் நால்வர் இனந்தெரியாதஆயுதபாணிகளால் நேற்று முன்தினம் இரவு கடத்தப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு ஆரையம்பதி பகுதி 3ம் குறிச்சியில் உள்ள பிரஸ்தாப நபர்களின் வீடுகளுக்கு, நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் சென்ற இனந்தெரியாத ஆயுதபாணிகள் இவர்களை கடத்திச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்ட சுந்தரம்பிள்ளை ஓய்வு பெற்ற அதிபர் என்றும், ஐக்கியதேசியக்கட்சியின் கொத்தணி அமைப்பாளரென்றும் புதிய இடதுசாரி முன்னணியின் வேட்பாளராக இருந்த போதும் ஐ.தே. கட்சிக்காக தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டவரென்றும் தெரியவருகிறது.

இதேவேளை மட்டக்களப்பில் இராஜலிங்கம் படைப்பிரிவு பேரினவாதக் கட்சிகளுக்கு முண்டு கொடுப்போருக்கு தக்க பாடம் புகட்டுவோம் என்று எச்சரிக்கைப் பிரசுரம் வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## மீன் சந்தை மீண்டும் பண்ணைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையால் தற்போது நடத்தப்பட்டு வரும் கொட்டடி மீன் சந்தையானது எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் முன்னர் மீன் சந்தை நடாத்தப்பட்ட பண்ணைப் பகுதிக்கு இடம் மாற்றப்படவுள்ளதாகவும்;

கொட்டடி ஆட்டிறைச்சிக் கடைகள் அனைத்தும்புதிதாக இயங்க விருக்கும் பண்ணை மீன் சந்தைப் பகுதியிலேயே அமைக்கப்படும் எனவும் அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் மாநகர சபையின் ஆணையாளர் இராமலிங்கம் தெரிவித்துள்ளார். (உ)

## அவசர கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

அரசசேவைகீழ் உழைப்புப் பட்டதாரிகள் சங்கத்தின் அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10மணிக்கு யாழ் மத்தியகல்லூரியில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் அரச சேவையிலுள்ள சகல உழைப்புப் பட்டதாரிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் கு.பற்குணராஜா கேட்டுள்ளார். (ந)

### ஐ தே,க வும்

சமர்ப்பித்தபோதே அவர்இரு பெரும்பான்மைக் கட்சிகளையும் குற்றம் சாட்டியுள்ளார்.

மல்வத்த பீடாதிபதியைச் சந்தித்த அமைச்சர்கள் அவரிடம் கருத்து தெரிவிக்கையில்

ஐக்கிய தேசியக் கட்சி விடுதலைப்புலிகளுடன்தொடர்பு வைத்துள்ளது. புலிகளின் ஆலோசனைப்படியே யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருமலை ஆகியமாவட்டங்களில் கூட்டமைப்பினர்போட்டியிடுகின்றனர், ஐக்கியதேசியக்கட்சி ஆட்சி அமைத்தால் விடுதலைபுலிகளின் கை ஓங்கும் என்றும் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் தான் மல்வத்தபீடாதிபதி ரம்புக்கனை விபக்ஸிசார தேரர் பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்த இருகட்சியினரும் ஆட்சியைக் கை பற்றும் நோக்கில் அப்பாவித் தமிழ் மக்களையும் தமிழ்க்கட்சித் தலைவர்களையும் பயன்படுத்தி வருகிறீர்கள் நீங்கள் இப்போதுகூறிய விடயம் அவ்வளவுபெரிய விடயமல்ல என்றும் கூறினார். [வ]

### வாக்களிக்குமாறு

மக்கள் கலந்துரையாடலும் தொடர்பான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது;

அவ் அறிக்கையில் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் சிறுசிறு குழுக்களாக சென்று

★ இனியும் தமிழ் மக்களாகிய நாபசலுகைகளைக்கண்டு ஏமாற முடியாது

★ நிரந்தர சமாதானத்துக்கு ஒரே வழி தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலை புலிகளின்தடையை நீக்கி அவர்களுடன் மூன்றாம தரப்பு மத்தியஸ்தத் துடன் பேசுதல்

★ தமிழ் மக்களின் மீதான பொருளாதாரத் தடையை நீக்குதல்

★ சலுகைகளைக் காட்டி உரிமையுடன் கூடிய நிரந்தர சமாதானத்தை பின்தள்ள முயற்சிப்பவர்களை தூக்கி எறிதல்

ஆகிய கருத்துக்களை மக்கள் முன்வைத்து கலந்துரையாடியதாகவும் அக் கருத்துக்களை மக்கள் ஏற்றுக் கொண்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது

பல்கலைக்கழக மாணவர்களின் இவ் விழிப்புணர்வு செயற்பாட்டில் குடாநாட்டு இளைஞர்கள் யுவதிகள் மற்றும் பெரியோர்கள் அனைவரும் மனமுவந்து ஈடுபட வேண்டுமென்றும் அவ் வறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (இ.10)

## கேகாலையில் மோதல்

(கொழும்பு)

கேகாலை மாவட்டத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த ஐ.தே.கட்சிஆதரவாளர்களுக்கும் பொ.ஐ. முன்னணி ஆதரவாளர்களுக்குமிடையே இடம்பெற்றமோதலின் போது இருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வ)

## கனடாவில் மாவீரர் தினம்

(ரொரின்டோ)

கனடாவின் ரொரின்டோ நகரில், உலகத் தமிழர் இயக்கம் மாவீரர் தினததை எழுச்சியுடன் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

ரொரின்டோ நகரில் உள்ள தேசிய வர்த்தக நிலைய கேட்போர்கூடத்தில் மாவீரர் தின நிகழ்வை எழுச்சியுடன் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்நிகழ்வில் 30 ஆயிரத்துக்கும அதிகமான ஈழத் தமிழ் மக்கள் கலந்து கொள்வாரெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை கனடாவில் மாவீரர் தினநிகழ்வை கொண்டாட கனேடிய அரசு அனுமதி மறுத்துள்ளதென்று இலங்கை வானொலி செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

### ஹக்கீம்

விட்டுள்ளார்.

ரவூப்ஹக்கீமின் பாதுகாப்பு குறைக்கப்பட்டதை அடுத்து ஹக்கீம் தனது பாதுகாப்பை அதிகரிக்குமாறுமனித உரிமை ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்திருந்தார் இதனை அடுத்தே பயஸ்முஸ்தபா அவருக்கு உடனடியாக பாதுகாப்பு வழங்குமாறு உத்தரவிட்டுள்ளார். (வ)

### ஜே.வி.பி

நாயக்காவுக்கு வந்தடைந்தார்.

இவரை ஜே.வி.பியின் முக்கிய தலைவர்கள் விமான நிலையம் சென்று வரவேற்றனர்.

இதேவேளை அண்மையில் லண்டனுக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அங்கு சோமவன்சவை சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். அத்துடன் அவருக்கு இலங்கை வருவதற்குரிய ஏற்பாடுகளையும் செய்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. [இ-7]


கலை நயம் மிக்க எழிலுறு தங்க நகைகளுக்கு



விவேகா நகை மாடம்

131, கஸ்தூரியார் வீதி, (கி-2212) யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 நவம்பர் 23ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.